## சாலை விபத்தில் உயிரிழந்த

# 5 கழகக் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.50 லட்சம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!


திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முத்துசுரேஷ்ராஜா அவர்களின் மனைவி திருமதி எம்.முத்துச்செல்வி அவர்களுக்கு நிதி.


ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சரவணன் அவர்களின் மனைவி திருமதி எஸ்.ஜானகி அவர்களுக்கு நிதி.


விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.விக்னேஷ்ராஜ் அவர்களின் மனைவி திருமதி பி.அபிதா அவர்களுக்கு நிதி.


ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த த.விஜயகுமார் அவர்களது மனைவி திருமதி வி.நதியா அவர்களுக்கு நிதி.

**சென்னை, ஜூலை 4 -**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முத்து சுரேஷ்ராஜா விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.விக்னேஷ்ராஜ் - ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டுபாளையம் பி.சரவணன், சூரம்பட்டி த.விஜயகுமார் - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி ஆகிய 5 குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் 50 இலட்சம் ரூபாயினை நேற்று முன்தினம் (2.7.2026) குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 27 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ. 2 கோடியே 70 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.**


கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி அவர்களின் மனைவி திருமதி மனோன்மணி அவர்களுக்கு நிதி.

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ் செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் - சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் - விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார், ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.லிங்கேஸ்வரன் - மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என். திருப்பதி - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா - திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார் - தேனி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ப.மணிகண்டன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வி.கோபாலகிருஷ்ணன் - தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சண்முகம் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.கார்த்திக் ஆகிய 22 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

திருநெல்வேலி மேற்கு மாவட்டம், கழுநீர்குளத்தைச் சேர்ந்த எம்.முத்து சுரேஷ்ராஜா அவர்கள் 03.01.2026 அன்று வீ.கே.புதூர் - அத்தியூத்து ரோட்டில் வன்னார் மாடசாமி கோவில் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கார் மோதிய விபத்தில் சிக்கியும் - விழுப்புரம் வடக்கு மாவட்டம், அருவாப்பாக்கத்தைச் சேர்ந்த விக்னேஷ்ராஜ் அவர்கள் கடந்த 21.7.2025 அன்று திண்டிவனத்திலிருந்து அருவாம்பாக்கத்தில் உள்ள தனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது எறையனூர் மேம்பாலம் இறங்கும் முன்பே ஜோசப் பள்ளிக்கூடம் அருகே அரசு பேருந்து மோதிய விபத்தில் சிக்கியும் - ஈரோடு தெற்கு மாவட்டம், வெங்கம்பூர் அஞ்சல், கல்வெட்டுபாளையத்தைச் சேர்ந்த கூலி தொழிலாளி பி.சரவணன் அவர்கள், கடந்த 15.10.2025 அன்று தாமரைபாளையம் சென்று வீடு திரும்பும் வழியில் கால்நடை மருத்துவமனை அருகில் கட்டுப்பாட்டை இழந்து, அதிவேகமாக வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்தில் சிக்கியும் - ஈரோடு தெற்கு மாவட்டம், சூரம்பட்டி, ஸ்டாலின் தெருவைச் சேர்ந்த த.விஜயகுமார் அவர்கள், 12.10.2025 அன்று திண்டல் ரிங் ரோடு ரங்கம்பாளையம் மேம்பாலத்தில் லாரி மோதி விபத்தில் சிக்கியும் - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், துரிஞ்சிபட்டு கிராமத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி அவர்கள், 26.3.2026 அன்று திருக்கோவிலூர் வட்டம், ஜானகிபுரம் அருகே அவர் சென்ற இருசக்கர வாகனம் விபத்தில் சிக்கியும் உயிரிழந்த இந்த 5 குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முத்து சுரேஷ்ராஜா அவர்களின் மனைவி திருமதி எம்.முத்துச்செல்வி அவர்களிடமும் - விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.விக்னேஷ்ராஜ் அவர்களின் மனைவி திருமதி பி.அபிதா அவர்களிடமும் - ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சரவணன் அவர்களின் மனைவி திருமதி எஸ்.ஜானகி அவர்களிடமும் - ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த த.விஜயகுமார் அவர்களது மனைவி திருமதி வி.நதியா அவர்களிடமும் - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி அவர்களின் மனைவி திருமதி மனோன்மணி அவர்களிடமும் நேற்று முன்தினம் (02.07.2026) காலை, வழங்கினார்.

## ஒன்றிய அரசின் ‘வி.பி.ஜி ராம் ஜி’ திட்டத்தில் பணி ஒதுக்க மறுப்பு!

# தமிழ்நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகள் மறியல்!

## ஆயிரக்கணக்கானோர் கைது!

*சென்னை, ஜூலை 4 -*

ஒன்றிய அரசின் விபி ஜி ராம் ஜி திட்டத்தில் பணி ஒதுக்க மறுப்பதை கண்டித்து தமிழகம் முழுவதும் மாற்றுத்திறனாளிகள் மறியல் ஈடுபட்டனர். அப்போது சட்ட நகலை எரித்து எதிர்ப்பு தெரிவித்தனர். தமிழ்நாடு முழுவதும் மறியலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் கைது செய்யப்பட்டனர். மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் கிராம மக்கள் அனைவருக்கும் வேலை வழங்கிட சட்டப்பூர்வ உரிமை இருந்தது. தற்போது ஒன்றிய பாஜ அரசு அந்த சட்டத்தை மாற்றி புதியதாக ‘விபி ஜி ராம் ஜி’ என்னும் சட்டத்தை கொண்டு வந்துள்ளது.

### ஏழை மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும்!

இதன்படி ஒன்றிய அரசு 60 சதவீத நிதியும், மாநில அரசுகள் 40 சதவீத நிதியை தங்கள் பட்ஜெட்டில் இருந்து ஒதுக்கிட வேண்டும். நிதி நெருக்கடியில் உள்ள மாநில அரசுகளால் 40 சதவீத நிதியை ஒதுக்க முடியாது. இதனால் ஏழை கிராமப்புற மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு தண்ணீர் எடுத்து செல்லுதல் உள்ளிட்ட இலகுவான வேலைகள் வழங்கப்பட்டதோடு, பணிதள பொறுப்புகளும் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் ஒன்றிய அரசு கொண்டுவரும் புதிய விபி ஜி ராம் ஜி திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை தொழிலாளர்களாக அங்கீகரிக்க மறுக்கின்றனர். ஒன்றிய அரசின் இத்தகைய மாற்றாந்தாய் மனப்போக்கால் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்வுரிமை கேள்விக்குறியாகி உள்ளது. எனவே இந்த புதிய சட்டத்தை கண்டித்து தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நெல்லை வண்ணாரப்பேட்டையில் மாற்றுத்திறனாளிகள் புதிய திட்ட சட்ட நகலை கிழித்தெறிந்து கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### கருப்புப் பட்டை அணிந்து போராட்டம்!

பின்னர் அவர்கள் வண்ணார் பேட்டை சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர். நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் நேற்று மறியல் போராட்டம் நடைபெற்றது. ஜூலை 1ம் தேதியை ‘கருப்பு தினமாக’ அறிவித்த மாற்றுத்திறனாளிகள், கருப்புப் பட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர். விழுப்புரம் ஆட்சியர் பெருந்திட்ட வளாகம் எதிரே நடந்த போராட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### புதிய சட்ட நகலை எரித்து மறியல்!

தொடர்ந்து சட்ட நகலை கிழித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைபோல், விக்கிரவாண்டி, திருவெண்ணெய்நல்லூர், திண்டிவனம், வானூர், கண்டாச்சிபுரம், மேல்மலையனூர் என விழுப்புரம் மாவட்டத்தில் 7 இடங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். கள்ளக்குறிச்சி நான்குமுனை சந்திப்பு பகுதியில், தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் கருப்பு பேட்ஜ் அணிந்து சட்ட நகலை எரித்து மறியல் போராட்டம் நடைபெற்றது.

இதேபோல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மறியலில் ஈடுபட்ட 500 பேர் கைது செய்யப்பட்டனர். கடலூர் திருப்பாதிரிப்புலியூர் சீமாட்டி சிக்னல் அருகே தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைக்கான சங்கத்தினர் சட்ட நகலை கிழித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர். வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, கே.வி.குப்பம், குடியாத்தம் உள்ளிட்ட பி.டி.ஓ. அலுவலகங்கள் முன்பு மாற்றுத்திறனாளிகள் சட்ட நகல் கிழித்து நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பி.டி.ஓ. அலுவலகம் முன்பு மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில், திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு கருப்புக் கொடியேந்தி மறியல் போராட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளை போலீசார் கைது செய்தனர்.

### ஆயிரக்கணக்கானோர் கைது!

அதேபோல் கீழ்பென்னாத்தூர், செங்கம், ஆரணி உள்ளிட்ட பி.டி.ஓ. அலுவலகங்கள் முன்பு மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர். இதேபோல் தாராபுரம், உடுமலை, திருப்பூர், ஈரோடு, பெருந்துறை, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி ஆகிய இடங்களில் மறியலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

விருதுநகர், மதுரை, ராமநாதபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல் கலெக்டர் அலுவலகம் முன் மறியல் நடத்திய நூற்றுக்கணக்கான மாற்றுதிறனாளிகள் கைது செய்யப்பட்டனர். இதேபோல், சிவகங்கை இளையான்குடி, திண்டுக்கல், தர்மபுரி, சேலத்தில் மறியல் போராட்டம் நடத்தி கைதாகினர். டெல்டாவில் நாகை, முத்துப் பேட்டை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் ஆகிய இடங்களில் மறியலில் ஈடுபட்ட 700க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கைது செய்யப்பட்டனர்.